சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.01.11.2023

OS.No. 38/2020

PW3: திரு. ஸ்டீபன் தேவராஜ் (வயது 62) த/பெ. அந்தோணிசாமி

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் நீதிமன்றத்திற்கு யார் அழைத்து சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் லாரன்ஸ் அழைத்து வந்துள்ளேன். இந்த வழக்கில் பால்ராஜ் எனக்கு எப்படி தெரியும் என்றால் உள்ளூர்காரர். புரோநோட்டில் 1, 2 சாட்சிகள் கையெழுத்து போட்டதற்கு கீழே யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். அந்த புரோநோட்டை நான் முழுசாக பார்த்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புரோநோட்டில் பின்னாடி என்ன எழுதியுள்ளது என்று தெரியுமா என்றால் பின்னாடி ஒன்றும் எழுதிவில்லை. பிரதிவாதியின் வீட்டு கதவு எண் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புரோநோட்டை எங்கு வைத்து எழுதினீர்கள் என்றால் சவேரியார் வில்லியம் வீட்டில் வைத்து எழுதினேன். அந்த சமயத்தில் நான் வழக்கு போட்டுள்ள லாரன்ஸ் வீட்டிற்கு போகவில்லை என்றால் சரிதான். 23.03.2017 அன்று நான் வீட்டில் இருந்தேன். அன்றைய தினம் யார் என்னை கூப்பிட்டது என்றால் வாதி, பிரதிவாதி இரண்டுபேரும் கூப்பிட்டார்கள். நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் 8 ஆம்வகுப்பு படித்துள்ளேன். புரோநோட்டில் எப்படி நிரப்ப வேண்டும் என்றும் எழுத வேண்டும் என்றும் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும்.புரோநோட்டிற்கு விபரம் யார் சொன்னது என்றால் பால்ராஜ் தான் சொன்னார். அந்த புரோநோட்டில் என்ன எழுதுனீர்கள் என்றால் வீட்டு செலவிற்காக ரூ. 1,50,000 வாங்கியதாக எழுதினேன். அந்த தொகை என் முன்னிலையில் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. என் முன்னிலையில் தான் கொடுக்கப்பட்டது. அந்த தொகை ரூ.500 நோட்டாக கொடுத்தார். நான் எழுதிய புரோநோட்டில் பால்ராஜ் ரேகை

வைத்தாரா அல்லது கையெழுத்து போட்டாரா என்றால் கையெழுத்து போட்டார். வட்டிக்கு ரூ. 1,50,000 பணம் வாங்குவதற்காக என்னை இருவரும் கூப்பிட்டார்கள். அன்றைய தினம் தாவா ஒரு புரோநோட்டு தான் எழுதினேன். கூப்பிடுவர்களுக்கு நான் இதுபோன்று புரோநோட்டு எழுதி கொடுப்பேன். புரோநோட்டு எழுதியதற்கு பால்ராஜ் ஆவணம் எதுவும் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. வாதி லாரன்ஸ் என்ன உறவு வேண்டும் என்றால் மாமன் மச்சான் உறவு. புரோநோட்டு எழுதும் போது எத்தனை பேர் இருந்தீர்கள் என்றால் லாரன்ஸ், சவேரியார் வில்லியம், குழந்தைசாமி, பால்ராஜ், மற்றும் நான் இருந்தோம். பால்ராஜ் பணத்தை திருப்பி கொடுத்துள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்த போது தான் இந்த வழக்கு விபரம் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் புரோநோட்டு எங்கு வைத்து எழுதப்பட்டுள்ளது என்று நான் சொல்லவில்லை என்றால் நான் சொல்லியுள்ளேன். நான் அந்த வாக்குமூலத்தில் புரோநோட்டு எங்கு வைத்து எழுதப்பட்டுள்ளது என்று சொல்லவில்லை என்றும், அவ்வாறு எழுதியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் அது சரியல்ல. தாவா புரோநோட்டில் எழுதியதாக சொல்லியுள்ள விபரங்கள் எதுவும் எனது கையெழுத்தே இல்லை என்றால் அது சரியல்ல. நான் எழுதியதாக சொல்லும் புரோநோட்டில் உள்ள தேதியில் அதில் உள்ளபடி பால்ராஜ் எந்த கடன் தொகையும் பெறவில்லை என்றும் அதில் அவர் கையெழுத்து இடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள விபரங்கள் நான் எழுதவில்லை என்றாலும் நான் எழுதியதாக சாட்சி கையெழுத்து மட்டும் தான் என்றாலும் அதனால் புரோநோட்டு விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் அது சரியல்ல. புரோநோட்டு எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 23.03.2017 ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டு ஆவணம் தான் நான் எழுதியதாகும். குழந்தைசாமியின் புரோநோட்டில் உள்ள அவரது கையெழுத்திற்கு கீழே உள்ள விபரத்தை எழுதியது நான் என்றால் சரிதான். சவேரியார் வில்லியம் கையெழுத்திற்கு கீழ் உள்ள அவரது விபரத்தை நான் எழுதிவில்லை. அவர் தான் எழுதினார். குழந்தைசாமியின்

கையெழுத்திற்கு கீழே உள்ள விபரமும், சவேரியார் வில்லியம் கையெழுத்திற்கு கீழே உள்ள விபரமும் ஒரே ஆள் எழுதியது என்றால் அது சரியல்ல. புரோநோட்டில் வாசகம் எழுதப்பட்டுள்ள விபரத்திற்கும் சாட்சிகளின் கையெழுத்திற்கு கீழே உள்ள விபரத்திற்கும் கையெழுத்து வேறுபாடுகள் உள்ளது என்றால் அது சரியல்ல. அந்ததாவா புரோநோட்டை கையெழுத்து நிபுணர் ஆய்விற்கு அனுப்பினால் புரோநோட்டு வாசகம் விபரத்திற்கும் குழந்தைசாமியின் கையெழுத்து விபரத்திற்கும் கையெழுத்து வித்தியாசம் தெரிய வரும் என்றால் அது சரியல்ல. அந்த புரோநோட்டில் முதல் பக்கத்தை தவிர வேறு எங்கும் நான் எழுத வில்லை என்றால் அது சரியல்ல. புரோநோட்டு பின் பக்கத்தில் உள்ள விபரத்தை யார் எழுதியது என்றால் காசு கொடுத்தவர் எழுதியிருக்கலாம். வாதி கேட்டு கொண்டதற்கு இணங்க நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

(மறு விசாரணை இல்லை).

/ singed /
ஸ்டீபன் தேவராஜ்

/singed/
திரு.S.விஜயகுமார்,M.A.,M.L.,
சார்பு நீதிபதி, இலால்குடி.